## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

---

# 1982 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க,

# சர்வதேச சிறகு அவரை நிறுவகச் சட்டம்

---

*[1982, பெப்ரவரி மாதம் 5 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1982, பெப்ரவரி மாதம் 05 ஆம் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 90 — தபாற் செலவு : சதம் 50

## 1982 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, சர்வதேச சிறகு அவரை நிறுவகச் சட்டம்

[1982, பெப்ரவரி மாதம் 5 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 35/80
1465

**சர்வதேச சிறகு அவரை நிறுவகத்தைத் தாபிப்பதற்கும், அதனுடன் தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடுசெய்வதற்கானவொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

1. இச்சட்டமானது, 1982 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, சர்வதேச சிறகு அவரை நிறுவகச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரால் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

சர்வதேச சிறகு அவரை நிறுவகத்தைத் தாபித்தல்.

2. (1) இதனகத்துப்பின்னர், "நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படுவதான சர்வதேச சிறகு அவரை நிறுவகம் என அழைக்கப்பட வேண்டியதும், 5 ஆம் பிரிவின்கீழ் அப்போதைக்குச் சபையின் உறுப்பினர்களாயிருப்போரான ஆட்களைக் கொண்டிருக்கவேண்டியதுமான நிறுவகமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) நிறுவகமானது, (1) ஆம் உட்பிரிவால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரினால் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டுமென்பதுடன், இடையறா வழியுரிமையையும் பொது இலச்சினையொன்றையும் கொண்டிருத்தலும் வேண்டும்; அத்துடன் அதன் கூட்டிணைக்கப்பட்ட பெயரில் வழக்குத் தொடரலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடரவும்படலாம்.

நிறுவகத்தின் பிரதான அலுவலகம்.

3. நிறுவகத்தின் பிரதான அலுவலகமானது கண்டியில் இருத்தல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், அமைச்சரின் ஒருப்பாட்டுடன் சபையானது அந்நோக்கத்துக்காக இலங்கையில் ஏதேனும் வேறு தோதான இடத்தைத் தெரிவுசெய்யலாம்.

நிறுவகத்தின் குறிக்கோள்கள்.

4. நிறுவகத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் :—

(அ) சர்வதேசக் கீர்த்திவாய்ந்ததும், பொருளாதாரப் பெறுமதிவாய்ந்ததுமான, உலகெங்கணும் மனித உணவுக்காகப் போன்றே கால்நடைத் தீனிக்காகவும் ஆன, மூலமொன்றாக சிறகு அவரையை அபிவிருத்திசெய்து பயன்படுத்துவதற்கு அவசியமான எல்லா ஆராய்ச்சிச் செயல் நடவடிக்கைகளையும், தொடர்புடைய நடவடிக்கைகளையும், நேரடியாகவோ நேரடியாகவன்றியோ மேற்கொண்டு நடாத்துதல் ;

(ஆ) மனிதகுலத்துக்கு முக்கியத்துவம்வாய்ந்த ஒரு பண்டமெனும் வகையில் சிறகு அவரையின் அபிவிருத்தியை மேம்படுத்துவதாக வமையும் ஆராய்ச்சி, பயிற்சி அல்லது பிற செயல்நடவடிக்கைகளுக்கென அர்ப்பணித்துச் செயற்படும் ஆளணியினரது பயிற்சிக்கான செயல்நடவடிக்கைகளை மேம்படுத்துதல் ;

ஏ 60776—6,500 (12/81)

(இ) சிறகு அவரையுடன் தொடர்புபட்ட தொழினுட்பத்திறனது உருவாக்கத்துக்கும், வளர்ச்சிக்கும், பயன்பாட்டுக்கும், அபிவிருத்திக்கும் உதவுவதாகவமையும் சிறகு அவரை தொடர்பான தகவலை களஞ்சியப்படுத்துதல் பரப்புதல், பயன்படுத்துதல் என்பன தொடர்பான எல்லாச் செயல்நடவடிக்கைகளிலும் ஈடுபடுதல்.

நிறுவகத்தின் பணிப்பாளர் சபை.

5. பதினைந்து உறுப்பினர்களுக்கு மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருப்பதான, இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும் பணிப்பாளர் சபையொன்றினால் நிறுவகத்தின் அலுவல்கள் நிருவகிக்கப்படுதல் வேண்டும்; இவ்வுறுப்பினர்களுள்—

(அ) இருவர் பதவிவழி உறுப்பினர்களாதல் வேண்டும். அவர்களாவோர்—

(i) அமைச்சரது அமைச்சுச் செயலாளர், அத்துடன்

(ii) பதினைந்தாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்டவரான நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி; அத்துடன்

(ஆ) ஏனையோர்—

(i) சிறகு அவரையினதும், பிற குறைநிலைப் பயன்பெறு தாவரங்களினதும் அபிவிருத்தியை மேம்படுத்துவதில் ஈடுபாடுடையோரும், அக்கறையுடையோரும் ஆன; அல்லது

(ii) நிருவாகம், நிதி அல்லது சட்டம் எனும் துறையில் அல்லது ஏதேனும் வேறு இணைந்த செயல் நடவடிக்கைத்துறையில் அனுபவமுடையோராகவும், தகுதியுடையோராகவும் தோன்றுவோரான,

ஆட்களாக இருத்தல் வேண்டும்.

நிறுவகத்தின் முதலாவது பணிப்பாளர் சபை.

6. (1) இதனகத்துப்பின்னர் "முதலாவது சபை" எனக் குறிப்பீடு செய்யப்படுவதான முதலாவது பணிப்பாளர் சபையானது,—

(அ) அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் சனாதிபதியால் நியமிக்கப்படும், இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடுசெய்யப்படுவோரான ஒன்பது உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்; இவர்கள் 5 ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் தரப்பட்ட தேவைப்பாடுகளுக்கு மேலதிகமாக, நிறுவகத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களைக் கொண்ட ஏதேனும் நிறுவகத்தின் வேலை தொடர்புபட்டவரை சர்வதேசப் புகழ்வாய்ந்தோராக இருத்தல் வேண்டுமென்பதுடன்,—

(i) இலங்கையிலிருந்து;

(ii) உலகத்தின் அபிவிருத்தியடைந்துவரும் பிராந்தியங்களிலிருந்து;

(iii) குறைநிலைப் பயன்பெறு தாவரங்களில் அக்கறை கொண்டுள்ள சர்வதேசத் தாபனங்களிலிருந்து ;

(iv) நிறுவகத்துக்கு நிதிகள் ஏற்பாடு செய்தளிக்கின்ற தாபனங்களிலிருந்து ; அத்துடன்

(v) நிறுவகத்துக்குப் பொருண்மையான நிதி உதவுதொகைகளை வழங்குகின்ற நாடுகளிலிருந்து,

தெரிவு செய்யப்படலாம் ; அத்துடன்

(ஆ) இரு பதவிவழி உறுப்பினர்களைக் கொண்டிருத்தலும் வேண்டும். அவர்களாவோர்—

(i) அமைச்சரது அமைச்சுச் செயலாளர் ; அத்துடன்

(ii) பதினைந்தாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்டவரான நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி.

(2) சனாதிபதியானவர், அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் முதலாவது சபையின் தவிசாளரொருவரையும் துணைத் தவிசாளரொருவரையும் அச்சபையின் உறுப்பினர்கள் மத்தியிலிருந்து நியமிக்கலாம்.

(3) (i) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும், அவர் இறப்பினால், பதவிதுறப்பினால், அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதனால் முன்னராகவே பதவியை வறிதாக்கினாலன்றி, மூன்று ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(ii) சபையின் பதவிவழி உறுப்பினர் ஒருவர், எப்பதவியின் நிமித்தம் அச்சபையின் உறுப்பினரொருவராக அவர் நியமிக்கப்பட்டாரோ அப்பதவியை அவர் வகிக்கும் காலம்வரை பதவி வகித்தல் வேண்டும்.

(4) முதலாவது சபையின் தவிசாளர், துணைத் தவிசாளர், அல்லது எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர், பதவியை வறிதாக்கும் பட்சத்தில், சபையானது இன்னொராளை, அவர் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரது பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலத்துக்கு அத்தகைய பதவியை வகிப்பதற்கென நியமிக்கலாம்.

(5) முதலாவது சபையின் தவிசாளர், துணைத் தவிசாளர் அல்லது எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர், சுகவீனம் அல்லது வேறேதேனும் ஏது காரணமாகத் தம் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தற்காலிகமாக இயலாதவராக இருக்கின்றவிடத்து, அவரின் இடத்தில் தவிசாளராக, துணைத் தவிசாளராக அல்லது அத்தகைய உறுப்பினராகச் செயலாற்றுவதற்கென சபையானது இன்னோர் ஆளை நியமிக்கலாம்.

(6) (அ) தவிசாளர், அதற்கெனச் சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதம் மூலம் எந்த நேரத்திலும் தமது பதவியைத் துறக்கலாம்.

(ஆ) முதலாவது சபையின் துணைத் தவிசாளர் அல்லது எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர் அதற்கெனத் தவிசாளருக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதம்மூலம் எந்த நேரத்திலும் தமது பதவியைத் துறக்கலாம்.

(7) முதலாவது சபையின் எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர் சபையின் உறுப்பினர்களது வாக்குகளின் மூன்றில் இரண்டுக்குக் குறையாத பெரும்பான்மை வாக்குகள்மூலம் அதற்கான காரணம் எதனையும் காட்டாது பதவியிலிருந்து அகற்றப்படலாம் என்பதுடன், அத்தகைய பதவியகற்றுகையானது எந்நீதிமன்றத்திலும் கேள்விக்குட்படுத்தப்படுதலுமாகாது.

**மேலதிக உறுப்பினர்களின் நியமனம்.**

7. (1) முதலாவது சபையானது எவ்வாளையும் பணிப்பாளரொருவராக நியமிக்கலாமென்பதுடன், அவர் அச்சபையின் (இதனகத்துப்பின்னர் அவர் "மேலதிக உறுப்பினர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) மேலதிக உறுப்பினரொருவராக இருத்தலும் வேண்டும்;

ஆயின், எவ்வாறாயினும், பணிப்பாளர்களின் மொத்த எண்ணிக்கையானது, இச்சட்டத்தால் விதித்துரைக்கப்பட்ட அதியுச்ச எண்ணிக்கையை எந்நேரத்திலும் விஞ்சுதலாகாது.

(2) மேலதிக உறுப்பினர் ஒவ்வொருவரும், அவர், இறப்பினல், பதவி துறப்பினல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதனுல் முன்னராகவே பதவியை வறிதாக்கினுலொழிய, மூன்றாண்டுக் காலப்பகுதியொன்றுக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(3) மேலதிக உறுப்பினர் எவரும் பதவியை வறிதாக்கும் பட்சத்தில், முதலாவது சபை, வேறொராளை, அவர் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரது பதவிக் காலத்தின் முடிவுறுதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவிவகிப்பதற்கென நியமிக்கலாம்.

(4) மேலதிக உறுப்பினர் எவரும் அவரது பதவிக்குரிய கடமைகளைச் சுகவீனம் அல்லது வேறேதேனும் ஏது காரணமாக நிறைவேற்றுவதற்குத் தற்காலிகமாக இயலாதவராகவிருப்பின், முதலாவது சபையானது, அத்தகைய உறுப்பினரின் இடத்தில் செயலாற்றுவதற்கென இன்னேர் ஆளை நியமிக்கலாம்.

(5) மேலதிக உறுப்பினர் எவரும் சபையின் தவிசாளருக்கு அதற்கென முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதம் மூலம் தமது பதவியை எந்த நேரத்திலும் துறக்கலாம்.

(6) மேலதிக உறுப்பினர் எவரும், முதலாவது சபையின் உறுப்பினர்களது வாக்குகளின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன், அதற்கான காரணமெதுவும் காட்டப்படாமலே பதவியிலிருந்து அகற்றப்படலாமென்பதுடன், அத்தகைய பதவியகற்றுகை நீதிமன்றமெதிலும் கேள்விக்குட்படுத்தப்படுதலுமாகாது.

**பின்னரான சபைகளை நியமித்தல்.**

8. (1) அடுத்துப் பின்னரான சபை ஒவ்வொன்றும் பதினைந்து உறுப்பினர்களுக்கு அதிகமாகாதோரை அடக்கியிருத்தல் வேண்டும்; அவர்கள் எந்த முன்னரான சபையின் உறுப்பினர்களை அடுத்துறுகின்றார்களோ, அவ்வுறுப்பினர்களது வாக்குகளின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையொன்றினுல் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) முதலாவது சபையொன்று தொடர்பான 6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், இச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்படும் அடுத்துறுவதான ஒவ்வொரு சபைக்கும் அது தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

9. இச்சட்டத்தின்கீழ் பதவியிலிருந்து அகற்றப்படும் உறுப்பினர் ஒருவரல்லாத, பதவியை வறிதாக்கும் உறுப்பினர் எவரும் மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும். சபையின் உறுப்பினராக மீள நியமிக்கப்படுவதற்கான தகவு.

10. சபையின் உறுப்பினர்களுக்கு சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும், அத்தகைய வீதங்களிலும் ஊதியம் வழங்கப்படுதல் வேண்டும். சபையின் உறுப்பினர்களுக்கான ஊதியம்.

11. நிறுவகத்தின் இலச்சினையானது— நிறுவகத்தின் இலச்சினை.

(அ) சபையின் தவிசாளரது கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்;

(ஆ) சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்; அத்துடன்

(இ) சபையின் அங்கீகாரவனுமதியுடனும் சபையின் உறுப்பினர் இருவரது சமூகத்திலும் தவிர எவ்வாவணத்தின்மீதும் பொறிக்கப்படுதலாகாது; அவ்விரு உறுப்பினர்களும் தமது சமூகத்திற்கு அடையாளமாக அவ்வாவணத்தில் ஒப்பமிடுதல் வேண்டும்.

12. சபையினது கூட்டங்கள் அவற்றுக்கான கூட்ட நடப்பெண் அத்துடன் அத்தகைய கூட்டங்களிலே பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறை என்பன தொடர்பில், இச்சட்டத்தின்கீழ் விதிகள் ஆக்கப்படலாம். சபையின் கூட்டங்கள்.

13. (1) சபையானது, அதன் எவையேனும் தத்துவங்களை, கடமைகளை அல்லது பணிகளை தவிசாளருக்கு, நிறைவேற்றுக் குழுவுக்கு அல்லது பணிப்பாளர் தலைமையதிபதிக்குக் கையளிக்கலாம். சபையின் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் கையளித்தல்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான சபையின் தத்துவங்களுள், கடமைகளுள் அல்லது பணிகளுள் எதுவும் கையளிக்கப்பட்டிருப்பவரான தவிசாளர், நிறைவேற்றுக் குழு அல்லது பணிப்பாளர் தலைமையதிபதி, சபையின் பொதுவான பணிப்புகளுக்கு அமைவாக, அவ்வாறு கையளிக்கப்பட்ட தத்துவங்களை, கடமைகளை அல்லது பணிகளைப் பிரயோகித்தல் வேண்டும், புரிதல் வேண்டும் அல்லது நிறைவேற்றுதல் வேண்டும்.

14. அதன் குறிக்கோள்களை எய்துவதற்கு நியாயமாக அவசியமாகக் கூடியவாறான அத்தகைய தத்துவங்களை, கடமைகளை அல்லது பணிகளை நிறுவகமானது பிரயோகித்தல் வேண்டும், புரிதல் வேண்டும் அல்லது நிறைவேற்றுதல் வேண்டும்; அத்துடன், குறிப்பாக— நிறுவகத்தின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும்.

(அ) உண்ணாட்டு மூலங்களிலிருந்தோ, வெளிநாட்டு மூலங்களிலிருந்தோ மானியக்கொடைகளையும், கொடைகளையும், நன்கொடைகளையும் காசாக அல்லது பொருளாகப்பெற்றுக்கொள்ளலாம்;

(ஆ) அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனமெதனையும் கொள்ளலாம் வைத்திருக்கலாம், எடுக்கலாம் அல்லது கொடுக்கலாம் குத்தகைக்கு எடுக்கலாம் அல்லது வாடகைக்கு எடுக்கலாம் ஈடுவைக்கலாம் அடகுவைக்கலாம் அத்துடன் விற்கலாம் அல்லது வேறு வகையில் கையுதிர்க்கலாம் ;

(இ) நிறுவகத்தின் குறிக்கோள்களை முன்னேற்றுவதற்காகவென மானியக்கொடைகளை, அறக்கொடைகளை அல்லது புலமைப்பரிசில்களை வழங்கலாம் ;

(ஈ) அதன் அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிக்கலாம், ஊழியத்திலமர்த்தலாம் ; அவர்களுக்கு ஊதியம் கொடுக்கலாம் ; அத்துடன் அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கலாம் ;

(உ) வங்கிக் கணக்குகளைத் திறக்கலாம், தொழிற்படுத்தலாம், மூடலாம் அத்துடன் பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி கடன் எடுக்கலாம் பணம் திரட்டலாம் ;

(ஊ) நிறுவகத்தின் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும் ,அதன் கடமைகளைப் புரிவதற்கும் அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கும் அவசியமாகக்கூடியவாறான, அல்லது உகந்தனவான அல்லது அவற்றின் இடைநேர்விளைவான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது உடன்படிக்கைகளையும் ஒன்றில் நேரடியாக அல்லது நிறுவகத்தினால் அதற்கென அங்கீகாரமளிக்கப்படும் அலுவலரொருவர் அல்லது முகவரொருவர் மூலமாகச் செய்துகொள்ளலாம் ; அத்துடன் புரியலாம் அல்லது நிறைவேற்றலாம் ;

(எ) முக்கியமாக சிறகு அவரை தொடர்பானவையும், அதன் பின்னர் தோதாகக்கூடியவாறான அத்தகைய பிற குறைநிலைப் பயன்பெறு தாவரங்கள் தொடர்பானவையுமான பயிற்சி, கல்வி விரிவாக்கம் அத்துடன் முழுதளாவிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றின் எல்லா அம்சங்களிலும் ஆராய்ச்சியை நடாத்தலாம், அதற்கு உதவியளிக்கலாம் அதனை ஒன்றிணைக்கலாம் அத்துடன் ஊக்குவிக்கலாம் ;

(ஏ) நிறுவகத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப்படுகின்ற பொறித்தொகுதியை இயந்திரத்தொகுதியை, அத்துடன் சாதனத்தை இறக்குமதி செய்யலாமென்பதுடன், நிறுவகம் திறமையாகச் செயற்படுவதற்காகவென சாதனத்தை, நிதிகளை ஆளணியை அத்துடன் வேறு ஏதேனும் உதவியைப் பெற்றுக்கொள்ளலாம்.

(ஐ) நிறுவகத்தால் வழங்கப்படும் எவையேனும் சேவைகளுக்காக கட்டணங்களை அல்லது விதிப்பனவுகளை விதித்தறவிடலாம் ;

(ஒ) நிறுவகத்துக்குச் சொந்தமான அல்லது அதனால் வைத்திருக்கப்படும் ஏதேனும் காணியில் ஏதேனும் கட்டடத்தை அல்லது அமைப்பைக் கட்டியெழுப்பலாம் அல்லது கட்டியெழுப்புவிக்கலாம் ;

(ஓ) இலங்கையிலிருந்தும், இலங்கைக்கு பயிரினவிருத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்வதை, இறக்குமதி செய்வதை அனுமதிக்கலாம் ; அத்துடன்

(ஔ) நிறுவகத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு இடைநேர்விளை வான அல்லது அதற்கு உகந்தனவான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் காரியங்களையும் செய்யலாம்.

நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி, பிரதிப் பணிப்பாளர் தலைமையதிபதி, மற்றும் பிற அலுவலர் முதலியோரை நியமித்தல்.

15. (1) சபையானது—

(அ) நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியையும்; அத்துடன்

(ஆ) சபையின் ஒருறுப்பினராக இல்லாதவராயும், ஆனால் நிறுவகத்தின் பணி தொடர்பில் தகைமையுடையவராயும் இருக்கவேண்டியவரான, நிறுவகத்தின் பிரதிப் பணிப்பாளர் தலைமையதிபதியையும்,

நியமித்தல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதியானவர்—

(அ) சபையின் கொள்கைகளுக்கும் முடிபுகளுக்கும் இணங்க, நிறுவகத்தின் முகாமைக்கும் நிருவாகத்துக்கும் பொறுப்பாக இருத்தல் வேண்டும்;

(ஆ) அவருக்குக் கையளிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தத்துவங்களை, கடமைகளை, பணிகளைப் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்; அத்துடன்

(இ) நிறுவகத்தின் நோக்கங்களுக்கு அவசியமாகவிருக்கக்கூடியோரான, அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும், நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு நியமித்தல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் கீழான அவரது தத்துவங்களையும் கடமைகளையும், பணிகளையும் பணிப்பாளர் தலைமையதிபதி பிரயோகிக்கையில் புரிகையில், அத்துடன் நிறைவேற்றுகையில், அவருக்கு பிரதிப் பணிப்பாளர் உதவுதல் வேண்டும்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதியினதும், பிரதிப் பணிப்பாளர் தலைமையதிபதியினதும், ஊதியம் உள்ளிட்ட ஊழிய நிபந்தனைகள் சபையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கான நியமனங்கள் தொடர்பிலான சபையின் தத்துவங்கள்.

16. இச்சட்டத்தின் பிற ஏற்பாடுகளுக்கு அமைவாக, சபையானது—

(அ) நிறுவகத்தின் பணியாட்டொகுதியினரை நியமிக்கலாம், வேலை நீக்கம் செய்யலாமென்பதுடன், அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டையும் பிரயோகிக்கலாம்;

(ஆ) பணியாட்டொகுதியினரது கூலிகளை அல்லது சம்பளங்களை அல்லது வேறு ஊதியத்தை நிர்ணயிக்கலாம்;

(இ) அத்தகைய பணியாட்டொகுதியினரது சேவை நியதி நிபந்தனைகளைத் தீர்மானிக்கலாம்; அத்துடன்

(ஈ) அத்தகைய பணியாட்டொகுதியினரது நலன்கருதி சகாய நிதியங்களையும் திட்டங்களையும் தாபித்து ஒழுங்குபடுத்தலாமென்பதுடன், அவற்றின்பால் உதவுதொகைகளையும் அளிக்கலாம்.

சபையின் செயல்கள் அல்லது நடவடிக்கைகள் ஏதேனும் வெற்றிடம் காரணமாக அல்லது உறுப்பினரொருவரின் நியமனத்திலான குறைபாடு காரணமாக செல்லுபடியற்றதெனக் கருதப்படுதலாகாது.

17. சபையில் ஏதேனும் வெற்றிடம் இருக்கின்றமை காரணமாக மாத்திரம் அல்லது சபையின் உறுப்பினரெவரதும் நியமனத்திலான ஏதேனும் குறைபாடு காரணமாக மாத்திரம், சபையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலாகாது.

சபையின் தத்துவங்களும், கடமைகளும் பணிகளும்.

18. இச்சட்டத்தின் பிற ஏற்பாடுகளுக்கமைவாக சபையானது, பின்வரும் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தல் வேண்டும், புரிதல் வேண்டும், அத்துடன் நிறைவேற்றுதல் வேண்டும் :—

(அ) நிறுவகத்தினது கொள்கை தயாரித்தற் குழுவாகச் செயற்படுதலும், அதன் பாரிய நிகழ்ச்சித்திட்டங்களைக் கொள்கையளவில் வகுத்தலும் அல்லது அங்கீகரித்தலும் ;

(ஆ) நிறுவகத்தினது வரவு செலவுத் திட்டத்தை அங்கீகரித்தலும், நிதி நிலைமையை மீளாய்வு செய்தலும் ;

(இ) நிறுவகத்தின் நிருவாகத்துக்கென நிதிகள் திரட்டுதலும், நிறுவகத்தின் தொழிற்பாட்டுக்கென உண்ணாட்டுத் தாபனங்களிடமிருந்துபோன்றே வெளிநாட்டுத் தாபனங்களிடமிருந்தும் முகவர் நிலையங்களிடமிருந்தும் நிதியுதவி பெற்றுக்கொள்ளுதல் ;

(ஈ) பணிப்பாளர் தலைமையதிபதியினால் சமர்ப்பிக்கப்படக்கூடியவாறான நிறுவகத்தின் அத்தகைய முன்னேற்ற அறிக்கைகளை மீளாய்வு செய்தலும், மதிப்பீடுசெய்தலும் ;

(உ) அதன் தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பவற்றுள் எவற்றையும் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அல்லது குழுக்கள் எவற்றுக்கும் கையளித்தல் ; அத்துடன்

(ஊ) நிறுவகத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எல்லா வழிவகைகளையும் எடுத்தல்.

விதிகளை ஆக்குவதற்குச் சபைக்குள்ள தத்துவம்.

19. எக்கருமங்கள் தொடர்பில், விதிகள் ஆக்கப்படுவதற்கு இச்சட்டத்தின்கீழ் அதிகாரமளிக்கப்படுகின்றதோ அல்லது தேவைப்படுத்தப்படுகின்றதோ, அக்கருமங்கள் எல்லாமும் தொடர்பிலும் அல்லது எவையேனும் தொடர்பில் சபையானது விதிகளை ஆக்கலாம்.

குழுக்களை நியமிப்பதற்கு சபைக்குள்ள தத்துவம்.

20. (1) சபையின் தத்துவங்களைப் பிரயோகிப்பதிலும், கடமைகளைப் புரிவதிலும், பணிகளை நிறைவேற்றுவதிலும் சபைக்கு உதவும் நோக்கத்திற்காகவும், மதியுரை வழங்கும் நோக்கத்திற்காகவும் போன்றே இச்சட்டத்தின் கோட்பாடுகளுக்கும் ஏற்பாடுகளுக்கும் பயன்கொடுக்கும் நோக்கத்துக்கு அவசியமானவையென சபை எண்ணும் எல்லாக் கருமங்கள் மீதும் அல்லது எவையேனும் கருமங்கள்மீது அதற்கு உதவும் நோக்கத்

துக்காகவும் அவசியமானவையென அது கருதக்கூடியவாறான ஒரு நிறை வேற்றுக் குழுவையும், தொழினுட்ப மதியுரைக் குழுவொன்றையும் அத்த கைய வேறு குழுக்களையும் சபை நியமிக்கலாம்.

(2) தொழினுட்ப மதியுரைக் குழுவானது, சபை அதன் கொள்கையை உருவாக்குவதில், அதற்கு பொதுவில் உதவுதல் வேண்டுமென்பதுடன், சபையின் அக்கொள்கைகளையும் முடிபுகளையும் செயற்படுத்துவதில் பணிப் பாளர் தலைமையதிபதிக்கு உதவுதலும் வேண்டும்.

(3) நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியே, தொழினுட்ப மதி யுரைக் குழுவின் பதவிவழித் தவிசாளராயிருத்தல் வேண்டுமென்பதுடன், அவர் நிறைவேற்றுக் குழுவின் உறுப்பினரொருவராக இருத்தலும் வேண் டும்.

(4) இப்பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட ஒவ்வொரு குழுவினதும் பதவிக் காலமும், குறிப்பான தத்துவங்களும், கடமைகளும், பணிகளும் சபையி னால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(5) குழுக்களின் கூட்டங்களில் (அத்தகைய கூட்டங்களுக்கான கூட்ட நடப்பெண் உட்பட) பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை தொடர் பில் சபையானது விதிகளை ஆக்கலாம்.

21. (1) நிறுவகமானது, அதற்கென சொந்த நிதியத்தைக் கொண்டி ருத்தல் வேண்டுமென்பதுடன், அதனைப் பேணிவருதலும் வேண்டும். நிறுவகத்தின் நிதியம்.

(2) நிறுவகத்தின் நிதியத்துட் பின்வருவன செலுத்தப்படுதல் வேண் டும் :—

(அ) நிறுவகம் தாபிக்கப்படுவதில் அக்கறை கொண்டுள்ள அத்தகைய தாபனங்களினால் ஏற்பாடுசெய்தளிக்கப்படக்கூடிய அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(ஆ) நிறுவகத்தினால், அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணி களையும் பிரயோகிக்கையில், புரிகையில், நிறைவேற்றுகையில் பெறப்படக்கூடிய அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன்

(இ) இலங்கையுள் ஆன அல்லது இலங்கைக்கு வெளியேயான, எத்தன் மைத்தான எம்மூலத்திலிருந்தும், வருமானம், கடன்கள், நன் கொடைகள், கொடைகள் அல்லது மானியக்கொடைகள் எனும் வகையாக நிறுவகத்தினால் பெறப்படக்கூடிய அத்தகைய எல் லாப் பணத்தொகைகளும்.

(3) நிறுவகத்தின் தத்துவங்களைப் பிரயோகிக்கையிலும், பணிகளை நிறைவேற்றுகையிலும், கடமைகளைப் புரிகையிலும், நிறுவகத்தால் உறப் பட்ட செலவினம் எதனையும் கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவையான அத் தகைய பணத்தொகைகள் எல்லாமும் நிறுவகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

22. நிதியத்திலிருந்து பணங்கள் எவற்றையும் மீளப்பெறுவதற்கும், அத்துடன் நிதியத்தின் எவையேனும் பணங்களை முதலீடு செய்வதற்கும் ஆன விதமும் முறையும் அந்நோக்கத்துக்கென காலத்துக்குக் காலம் ஆக் கப்படக்கூடிய அத்தகைய விதிகளுக்கு இணங்க இருத்தல் வேண்டுமென் பதுடன், அத்தகைய விதிகளுக்கு இணங்கவல்லாது பணத்தொகையெது வும் மீளப்பெறப்படுதலும் ஆகாது. நிதியத்தின் பணங்களை மீளப்பெறுத லும் முதலீடு செய்தலும்.

வரிக் கொடுப்பன விலிருந்து நிறுவகத்துக்கு விலக்களிக்கப் படுதல்.

23. (1) நிறுவகமானது—

(அ) அத்தகைய விலக்களிப்பு இல்லாவிட்டால் எந்தச் சாதனம் தொடர்பில் அறவிடப்படற்பாலதான தீர்வையை நிறுவகம் கொடுப்பனவு செய்வதற்குப் பொறுப்பாதல் வேண்டுமோ நிறுவகத்தினுல் அல்லது நிறுவகத்தின் சார்பில் அல்லது நிறுவகத்துக்குச் சாதகமாக எழுதிநிறைவேற்றப்படுகின்ற அந்த ஏதேனும் சாதனத்தின்மீதான ஏதேனும் முத்திரைத் தீர்வைக் கொடுப்பன விலிருந்து ;

(ஆ) எவையேனும் பண்டங்களினது, வாகனங்களினது, பொறித் தொகுதியினது, அத்துடன் இயந்திரத்தொகுதியினது இறக்குமதியானது நிறுவகத்தின் குறிக்கோள்களை முன்னேற்றுவதாகவுள்ளது என அமைச்சராலும், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சராலும் கருதப்பட்டால், நிறுவகத்தால் இறக்குமதிசெய்யப்பட்ட அத்தகைய பண்டங்கள், வாகனங்கள், பொறித்தொகுதி, இயந்திரத்தொகுதி என்பவற்றின்மீதான ஏதேனும் சுங்கத் தீர்வைக் கொடுப்பனவிலிருந்து ;

(இ) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் செல்வ வரியின் கொடுப்பனவிலிருந்து ; அத்துடன்

(ஈ) விடயத்துக்கேற்றவாறு, 1980 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, அபிவிருத்திச் சபைகள் சட்டத்தின்கீழ், மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின்கீழ் அல்லது நகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் ஆன எவையேனும் வீதவரிகளினதும், வரிகளினதும் கொடுப்பனவிலிருந்து,

விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(2) இலங்கையின் பிரசையொருவரல்லாத நிறுவகத்தின் ஊழியரெவரும்—

(அ) அவரது சொந்தப் பயன்பாட்டுக்கென அவரால் இறக்குமதி செய்யப்படும் பண்டங்கள் அல்லது வாகனங்கள் எவற்றினதும் மீதான சுங்கத் தீர்வைக் கொடுப்பனவிலிருந்து ; அத்துடன்

(ஆ) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான வருமான வரி அல்லது செல்வ வரியிலிருந்து,

விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

நிறுவகத்தின் நிதியாண்டும் கணக்குகளின் கணக்காய்வும்.

24. (1) நிறுவகத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாக இருத்தல் வேண்டும்.

(2) நிறுவகத்தினது வருமானம், செலவினம், சொத்துக்கள், பொறுப்புக்கள் பற்றியனவும், நிறுவகத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றியனவுமான தகுந்த கணக்குப் புத்தகங்களை சபையானது வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) நிறுவகத்தின் கணக்குகள், சபையினல் நியமிக்கப்படும் தகைமை பெற்ற கணக்காய்வாளர்களால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) நிறுவகத்தின் கணக்காய்வாளர்களின் ஊதியத்தை சபை தீர்மானித்தல் வேண்டும்.

25. அரசாங்கமானது, அவசியமெனக் கருதப்படக்கூடிய அத்தகைய காணியையும், கட்டடங்களையும், வேறு வசதிகளையும் நிறுவகத்தின் பயன்பாட்டுக்கென ஏற்பாடுசெய்தளிக்கலாம். நிறுவகத்தின் பயன்பாட்டுக்கென, அரசாங்கம் வளவுகளைக் கிடைக்கக்கூடியதாகச் செய்தல்.

26. (1) தொடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும்— இச்சட்டத்தின் கீழ் அல்லது சபையின் பணிப்பின்மீது எடுக்கப்படும் செயலுக்கான பாதுகாப்பு.

(அ) இச்சட்டத்தின்கீழ், சபையினல் நல்லெண்ணத்துடன் புரியப்படும் அல்லது புரியப்படுவதாகக் கொள்ளப்படும் செயல் எதற்காகவும் சபைக்கு எதிராக ; அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்புகளின் மேல் நிறுவகத்தின் உறுப்பினர், அலுவலர், சேவையாளர் அல்லது முகவர் எவரினும் நல்லெண்ணத்துடன் புரியப்படும் அல்லது புரியப்பட்டதாகக் கொள்ளப்படும் செயல் எதற்காகவும், அவருக்கு எதிராக,

எழுதல் ஆகாது.

(2) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்பாக, சபையினல் கொணரப்படும் அல்லது சபைக்கு எதிராகக் கொணரப்படும் தொடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதிலும் சபையினல் உறப்படும் செலவு எதுவும், நிறுவகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஏதேனும் தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் சபைக்குச் செலுத்தப்பட்ட அல்லது சபையினல் அறவிடப்பட்ட செலவுதொகைகள் எவையும் நிதியத்துக்கு வரவு வைக்கப்படுதலும் வேண்டும்.

(3) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்பாக, (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பிடுசெய்யப்பட்டவரான எவரேனும் ஆளுக்கு எதிராக, இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்பின்மேல் அவரால் புரியப்படும் அல்லது புரியப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயல் தொடர்பில் கொணரப்பட்ட ஏதேனும் தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அத்தகைய எவரேனும் ஆளினல் உறப்பட்ட செலவு எதுவும், அத்தகைய செலவு அத்தகைய தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரால் அறவிடப்பட்டாலன்றி, அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்த்தால், நிறுவகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

சபையின் உறுப்பினரது உடலுக்கெதிராகவோ ஆதனத்துக்கெதிராகவோ, அல்லது நிறுவகத்தின் அலுவலர் மீதோ எழுத்தாணை எதுவும் எழுதலாகாது.

27. நிறுவகத்துக்கு எதிராகக் கொணரப்படும் வழக்கு எதிலும், சபையின் உறுப்பினரெவருக்கும் எதிராக, அல்லது நிறுவகத்தின் அலுவலர், சேவையாளர், அல்லது முகவர் எவருக்கும் எதிராக, உடலுக்கெதிரான அல்லது ஆதனத்துக்கெதிரான எழுத்தாணையெதுவும் எழுதலாகாது.

நிறுவகம் கலைக்கப்படுதல்.

28. (1) நிறுவகமானது கலைக்கப்படுதல் வேண்டுமெனச் சபை அபிப்பிராயப்படுமிடத்து, அது, அதன் உறுப்பினர்களுள் மூன்றிலிரண்டு பங்கினரால் நிறைவேற்றப்படும் தீர்மானத்தின்மூலம் நிறுவகத்தைக் கலைப்பதற்குத் தீர்மானிக்கலாம்.

(2) அமைச்சரானவர், சபையினால் செய்யப்படும் ஏதேனும் அத்தகைய முடிபின்மேல், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் நிறுவகத்தைக் கலைக்கலாம்; அத்துடன், நிறுவகத்தை ஒழிப்போனாக அல்லது ஒழிப்போர்களாக இருக்கவென ஓராளை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்களை நியமிக்கலாம்.

(3) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தோராம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 20 ஆம், 21 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள், ஏற்ற மாற்றங்களுடன், நிறுவகம் ஒழிக்கப்படுதலுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.